# உலகப் பரப்பில் ஓர் ஓசை
# வந்து கேட்கிறதா?

கவிச்சுடர் அன்பு முகையதீன்

உலகப் பரப்பிருந்தோர் ஓசைஇன்று கேட்கிறதா
சத்த வெடிகளுக்குள் சங்கமித்து ஓங்கியதா
உலகப் பரப்பிருந்தோர்
ஓசை இன்று கேட்கிறதா?

எத்தனையோ ஆண்டுகளாய்
இவ்வோசை கேட்கிறதே
நித்திரையில் கூட அது நெஞ்சை மிகத் தாக்கிறதே
உலகப் பரப்பிருந்தோர் ஓசைஇன்று கேட்றதா?

சத்த வெடிகளுக்குள்
சங்கமித்து கேட்கிறதா?

இந்த உலகத்தில் இதுவரையில் ஓசைபல
வந்துவந்து காதில் வரலாற்றைச் சொன்னதுதான்
என்றாலும் இவ்வோசை யாவின் அனைத்திலுமே
சற்றுப் புதிய சரித்திரத்தைச் சொல்கிறது.

சத்தியத்தின் ஓசைக்கும் சங்கொலியாய் கேட்கிறது
இத்தரையில் நீதிக்காய் என்றும் ஒலிக்கிறது.

எத்தனையோ ஆன்மாவை இழந்துவிட்ட போதினிலும்
புத்துணர்வு ஊட்டும்
புதுக்குரல்கள் கேட்கிறது.

இறந்துவிடும் வேளையிலும் இனிய பலஸ்தீனர்
மறந்துவிடாது மனத்தீக் கொதிப்பிற்
பிறந்து எழுகின்ற பிள்ளைகளும் போரில்
இறந்து மடிந்தாலும் எமக்கின்ப மென்றே.

உரத்து முழங்குவது
உங்களுக்குக் கேட்கிறதா?
பச்சைக் குழந்தைகளை பாலூட்ட ஏந்துகையில்
இச்சை வெறிகொண்ட இஸ்ரவேல் போர் நாய்கள்
உச்சியிலே நின்று உரத்தபெரும் குண்டெறிந்து
கொச்சைப் படுத்தியே கொண்டுவிடும் வேளையிலும்

எங்களது தாயகத்தை
மீட்போம் இனிமீட்போம்
எங்களது தாயகத்தை மீட்போம் இனி மீட்போம்!
என்ற குரல்கள் எழுந்திங்கு கேட்கிறதா?

கட்டிலிலே தூய்த்துக் கண்ணுறங்கி எத்தனை நாள்
எட்டி அவளை இறுக அணைத்தெடுத்து
முத்தமொன்று ஆய முயற்சிப்பான் அப்போது
சத்தமொன்று கேட்கும் சமருக் கெழுந்திடுவான்.

பள்ளிக்குச் செல்கின்ற பாலர்கள் அச்சத்தால்
துள்ளி வருவார் துயரக் குரல்கேட்கும்
என்ன நடந்ததுவோ என்றவர்கள் தாய்மார்கள்
அள்ளி அணைக்கிற ஆவலிலே ஓடுகையில்
குண்டால் பொடிந்து குருதியில் தத்தளிப்பார்.

பட்டினியால் வெந்த பசிபோக்க ஆவலிலே
றொட்டியினை வைத்து 'நசி' பார்த்துக் கொண்டிருப்பார்
விட்டுவிடுவாரா வெறிகொண்டு(டு) அலைபவர்கள்
கொட்டி விடுவார்கள் குண்டுகளை, தீ யெழும்பும்.

அப்போதும் அங்கிருந்து ஆவேசக் கூச்சலெழும்.

எங்களது தாயகத்தை
மீட்போம்! இனி மீட்போம்.
எங்கள் உயிரை
இழந்தாலும் காத்திடுவோம்!

வல்லஇறையோனை வணங்கித் துதிப்பதற்காய்
எல்லோரும் பள்ளிக்குள் ஒன்றி அணிதிரள்வர்
எல்லையிலே நின்று இதைப்பார்த்துக் கொண்டிருந்த
உள்ளமிலா ஈன உயிர்குடிக்கும் அக்கொடியோர்
வெள்ளமெனப் பாய்ந்துவந்து வேட்டுக்குள் தீர்த்துவைப்பர்
பள்ளிக்குள் செங்குருதி பாய்ந்து பெருக்கெடுக்கும்.

'அல்லாஹு அக்பர்' அகிலத் தெதிரொலிக்கும்
வையப் பரப்பிருந்தோர் ஓசைஇன்று கேட்கிறதா?
சத்த வெடிகளுக்குள் சங்கமித்து ஓங்கியதா?

இன்றல்ல நேற்றல்ல
இவ்வோசை கேட்கிறது
சென்ற பல ஆண்டாய்
செவிகளிலே தீய்க்கிறது.

இந்தஇடி ஓசைகள் ஏன்இன்(று) எழுகிறது
சொந்த நிலத்தில் சுதந்திரமாய் வாழ்வதற்காய்
இந்தஇடி ஓசைகளை இன்று எழுப்புகிறார்!

எங்கிருந்தோ ஓடிவந்த இஸ்ரேல் வெறியர்கள்
வந்த இடத்தில் வசமாய் அமர்ந்திருந்து
தந்திரமாய் பலஸ்தீனை தமதாக்க முயற்சித்தால்
எந்த மனிதன் இதைப் பொறுத்துக் கொண்டிருப்பான்.

எந்த மனிதன்
இதைப் பொறுத்துக் கொண்டிருப்பான்.

சிந்தையுள்ள மாந்தர்இதை சீரணிக்க ஏலாது
நெஞ்சு கொதிக்கின்றார் நேசக்கரங் களினை
பாலஸ்தீன் வீரருக்காய் பாசமுடன் நீட்டுகிறார்.

மக்கள் உணர்வை மதியா அறிவிலிகள்
பக்கத்துணையாய் படைக்கான ஆயுதத்தை

எப்போதும் ஈந்துதவி இஸ்ரேல் எழுச்சிபெற
ஒப்போடு நின்று உழைக்கிறான் அதைக்கண்டு.

இப்போ(து) உலகில் இளம்பிறை ஏற்றமுறும்
ஒப்பில்லா நாடுபல உறக்கத்தில் ஆழ்ந்ததுவா?
எப்படி நாம்இதனை ஏற்றும் பொறுத்திருப்போம்.
எப்படி நாம்இதனை ஏற்றுப் பொறுத்திருப்போம்!

சொந்தச் சோதரர்கள் சோபையின்றி வாழ்நாளில்
எந்தப் பொழுதும் இறப்போடு போராடிக்
கொண்டிருக்கும் போது குளிர்ந்த அறையில்
இளம்பிறை நாட்டு இளவரசர் எல்லோரும்

சென்று பழுத்து சிரித்து சுவைத்திருந்தால்
எப்படி நாம்இதனை ஏற்றுப் பொறுத்திருப்போம்
நெஞ்சு ஏகாதிக்கிறதே நினைக்கும் போதினிலே
நெஞ்சு கொதிக்கிறதே நினைக்கும் போதினிலே.

மண்ணில் உயிருக்காய்
மடிய பலஸ்தீனர்
தண்ணி வெறியோடு
தள்ளாடுகின்றவர் யார்?

சத்தியம், நீதி, சமத்துவம், ஒற்றுமை
இத்தரைக்கும் போதித்த இஸ்லாத்தின் பிள்ளைகளே
நித்தமும் சண்டையிடும் நீணிலத்திற் போராடி
செத்து மடிகின்ற சீரழிவை என்னென்பேன்.

ஒற்றுமையாய் இன்று
உலகில் அணிதிரண்டால்
பொற்புடைய ஓர் உலகு
பூத்துச் சிரிக்கிறதா?

உண்மையில் அங்கு ஒரு வீரன் உள்ளவரை
தரமுடன் போராடி தாயகத்தை மீட்டெடுப்பான்
என்னதான் நேர்ந்தாலும் இனி உறங்கப் போவதில்லை
மண்ணிலே போராடி மாளத் துணிந்துள்ளான்.

நெஞ்சுரத்தை மட்டும் நிறுத்தியவன் போராடி
அஞ்சாது எழுந்துள்ளான் ஆஹா! இனியென்ன?
இஸ்ரவேல் குண்டின் இலக்கில் துடிக்கையிலும்
எங்களது தாயகத்தை மீட்போம் இனிமீட்போம்
எம்மை இழந்தாலும் இனியதனை நாம் காப்போம்
என்று முழங்குவது இங்குவந்து கேட்கிறதா
வையப் பரப்பிருந்தோர் மாமுழக்கம் கேட்கிறதா?

தன்னை இழந்தாலும் தாயகத்தை மீட்பதற்கு
உன்னி எழுகின்ற ஓ எங்கள் நண்பர்களே
உங்களது போராட்டம் ஒன்றித் தொடரும்வரை
என்றோ ஒருநாள் இருந்துவந்த தாயகத்தை
வென்று வருவார்கள் வீரர்கள் என்றந்த
குன்றாத உறுதியுடன் குலையாத இலட்சியத்தில்

நின்று உழைக்கின்ற நெஞ்சுறுதி மேற்கொண்ட
அஞ்சாத சிங்கங்களே! ஆடாத குன்றங்களே!
நெஞ்சுகளில் என்றும் நிலைத்துள்ள தீபங்களே!
அன்பான எங்கள் அருமையுள்ள நண்பர்களே!

என்வேள்வித் தீயில் உருவா(கு)ம் பலஸ்தீனம்
இன்னும் சில நாளில் எழுந்து எழுச்சிபெறும்.

ஏகாதி பத்திய ஒப்பமிடும் வாதிகள்
தாகவெறியால் தரணியினை ஆட்படுத்த
ஆசைமிக வுற்று அழிந்தகதை நாமறிவோம்
தோஷம் பிடித்தவர்கள் தொல்லைமிகத் தந்தாலும்
நாசம் அவர்க்கே நடக்கும் அதைக் காண்போம்!
வேஷம் கலையும் விடிவொன்று இனிக்கேட்கும்.

நீதிக்காய் போரிட்டோர் நீணிலத்தில் தோற்றதில்லை!
வீதியிலே நின்றவர்கள் வெற்றிபெற்றுச் சென்றதில்லை
சத்தியத்தைக் கொன்றோர் சரித்திரத்தில் நின்றதில்லை
உத்தமர்கள் வாக்கு ஒருபோதும் பொய்த்ததில்லை.

போராட்ட வீரர்களே! பொங்கிப் புறப்படுங்கள்
பாராட்டி பாட்டிசைக்க பாவல்லோர் ருள்ளார்கள்
பாலஸ்தீன் மண்மீட்க பாடுபடும் தோழர்க்காய்
எண்ணில்லாக் கோகிலங்கள் என்றும் கவிவடிக்கும்

பாலஸ்தீன் மண்மீட்க பாடுபடும் போர் வீரர்
வெல்லும் வரையும் விழித்திருந்து பாஇசைப்போம்
வெல்லும் வரையும் விழித்திருந்து பாஇசைப்போம்
நில்லாது அப்பாடல் நித்தம் இனிக்கேட்கும்.

சத்த வெடிகளுக்குள் சங்கமித்து வையமெங்கும்
வெற்றிக் குரல்கள் விரைவில் இனிக்கேட்கும்
பற்றியெழும் வேட்கை பரந்து

உலகப் பரப்பிருந்தோர் ஓசைஇன்று கேட்கிறதா
சத்த வெடிகளுக்குள் சங்கமித்து ஓங்கியதா
உலகப் பரப்பிருந்தோர்
ஓசை இன்று கேட்கிறதா?

SOUTH EASTERN UNIVERSITY LIBRARY

எத்தனையோ ஆண்டுகளாய்
இவ்வோசை கேட்கிறதே
நித்திரையில் கூட அது நெஞ்சை மிகத் தாக்கிறதே
உலகப் பரப்பிருந்தோர் ஓசைஇன்று கேட்றதா?

சத்த வெடிகளுக்குள்
சங்கமித்து கேட்கிறதா?

இந்த உலகத்தில் இதுவரையில் ஓசைபல
வந்துவந்து காதில் வரலாற்றைச் சொன்னதுதான்
என்றாலும் இவ்வோசை யாவின் அனைத்திலுமே
சற்றுப் புதிய சரித்திரத்தைச் சொல்கிறது.

சத்தியத்தின் ஓசைக்கும் சங்கொலியாய் கேட்கிறது
இத்தரையில் நீதிக்காய் என்றும் ஒலிக்கிறது.

எத்தனையோ ஆன்மாவை இழந்துவிட்ட போதினிலும்
புத்துணர்வு ஊட்டும்
புதுக்குரல்கள் கேட்கிறது.